நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**முட்டை விலை**

First Published : 30 Apr 2011 02:15:21 PM IST

நாமக்கல், ஏப்.29: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு வெள்ளிக்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ. 2.25, சென்னையில் ரூ. 2.30.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு வெள்ளிக்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 62, முட்டைக் கோழி கிலோ ரூ. 45.

**அறுவடையான சூரியகாந்தி விதையை உடனே விற்பனை செய்யப் பரிந்துரை**

First Published : 30 Apr 2011 11:01:54 AM IST

திண்டுக்கல், ஏப். 29: விவசாயிகள் அறுவடை செய்துள்ள சூரியகாந்தியை உடனே விற்று பயனடைய வேண்டும் என திண்டுக்கல் மாவட்ட வேளாண் வணிக துணை இயக்குநர் கு.ரா.சாரநாத்பாபு பரிந்துரை செய்துள்ளார்.

உலகளவில் சூரியகாந்தி விதை உற்பத்தியில் ஐரோப்பிய நாடுகள், ரஷ்யா, உக்ரைன், அர்ஜென்டினா, அமெரிக்கா, சீனா, இந்தியா, துருக்கி ஆகிய நாடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்நாடுகளில் ரஷ்யா முதலிடத்திலும் அதனைத் தொடர்ந்து உக்ரைனும் உள்ளது.

இந்தியா, மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் இருந்து பாமாயிலும், பிரேசில், அர்ஜன்டினா நாடுகளில் இருந்து சோயா எண்ணெய், உக்ரைன், ரஷ்யா, அர்ஜன்டினா நாடுகளில் இருந்து சூரியகாந்தி எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது.

இந்தியாவில் கர்நாடகா, மகாராஷ்டிரா, ஆந்திர மாநிலங்களில் சூரியகாந்தி உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழகத்தில் கரூர், திருச்சி, திண்டுக்கல், தூத்துக்குடி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் சூரியகாந்தி அதிகளவில் பயிரிடப்படுகின்றன. வெள்ளக்கோவில், மூலனூர், கொடுமுடி ஆகியவை சூரியகாந்திக்கு முக்கிய சந்தைகளாக செயல்படுகின்றது.

கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக் கழகத்தில் இயங்கிவரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் சூரியகாந்தி சந்தை நிலவரங்களை ஆய்வு செய்து விலை முன்னறிவிப்பு செய்துள்ளது.

இதன்படி ஏப்ரல், மே மாதங்களில் சூரியகாந்தி ஒரு கிலோவுக்கு ரூ.27 முதல் 30 வரை விலை இருக்கும். விலை ஏற்றத்திற்கு மிக குறைந்த வாய்ப்பு உள்ளது. 100 மில்லிலிட்டர் கொள்ளவில் உள்ள விதைகள் 40 முதல் 42 கிராம் எடையில் இருந்தால் விலை அதிகமாகக் கிடைக்கும். எனவே, விவசாயிகள் அறுவடை செய்த சூரியகாந்தியை உடனே விற்றுவிட வேண்டும் என மாவட்ட வேளாண் வணிக துணை இயக்குநர் தெரிவித்தார்.

**பூண்டு, வெங்காய பயிர்களில் உயர் விளைச்சல்**

First Published : 30 Apr 2011 01:51:37 PM IST

உதகை, ஏப். 29: பூண்டு மற்றும் வெங்காயப் பயிர்களில் உயர் விளைச்சல் ரகங்களை உருவாக்குதல் மற்றும் பயிர் பாதுகாப்பு தொடர்பான 2 நாள் தேசியக் கருத்தரங்கு உதகையில் வெள்ளிக்கிழமை தொடங்கியது.

வெங்காயம் மற்றும் பூண்டுக்கான அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம், புணேவைத் தலைமையிடமாகக் கொண்டு, 12 ஒருங்கிணைந்த மற்றும் 16 தன்னார்வ மையங்களோடு இயங்கி வருகிறது.

பல்வேறு வகையான வெங்காயம் மற்றும் பூண்டு வகைகளைச் சேகரிப்பது மற்றும் உயர் விளைச்சல் ரகங்களை உருவாக்குதல், பயிர் உற்பத்தி மற்றும் பயிர் பாதுகாப்பு நுட்பங்களை உருவாக்குதல் போன்றறை இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த மையத்தின் ஆராயாச்சித் திட்ட முடிவுகள் குறித்த கலந்தாய்வு ஆண்டுக்கொரு முறை நடைபெறும். இந்த திட்டம் சார்பில் தேசியக் கருத்தரங்கு உதகையில் வெள்ளிக்கிழமை துவங்கியது.

இதில், இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவன துணை இயக்குநர் ஹெச்.பி.சிங் பேசியது:

தமிழகத்தில் சிறிய வெங்காயம் முக்கிய பணப் பயிராக உள்ளது. சுமார் 32,000 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 2.53 லட்சம் டன் உற்பத்தி மற்றும் 8.02 டன் உற்பத்தி திறனைக் கொண்டுள்ளது.

பங்களாதேஷ், மலேசியா, துபாய் போன்ற நாடுகளுக்கு சிறிய வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

அதேபோல, உதகை மற்றும் கொடைக்கானல் மலைப் பகுதிகளில் பூண்டு பயிரிடப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், பூண்டு மற்றும் வெங்காய ஆராய்ச்சியில் ஒரு முக்கிய மையமாக உள்ளது.

வெங்காயம் குறித்த ஆராய்ச்சி, கோவையில் உள்ள தோட்டக் கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலும், பூண்டு குறித்த ஆராய்ச்சி உதகையில் உள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்திலும் நடைபெற்று வருகிறது என்றார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலை. பதிவாளர் பி.சுப்பையன் தலைமை வகித்தார்.

புணேவில் உள்ள வெங்காயம் மற்றும் பூண்டு ஆராய்ச்சி இயக்ககத்தின் இயக்குநர் கே.இ.லவாண்டே பேசினார். வேளாண் பல்கலை. டீன் என்.குமார் வரவேற்றார். கருத்தரங்க அமைப்புச் செயலர் எல்.புகழேந்தி நன்றி கூறினார்.

சனிக்கிழமை நடைபெற உள்ள நிறைவு விழாவில், வேளாண் பல்கலை. துணைவேந்தர் பி.முருகேசபூபதி, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவன துணை இயக்குநர் ஹெச்.பி.சிங் ஆகியோர் பேசுகின்றனர்.

தினமலர்

**மரக்கன்றுகள் நடும் விழா**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 30,2011,01:07 IST

வேலூர்: வேலூர் அடுத்த திருமலைக்கோடி ஓம் சக்தி நாராயணி பீடம் சார்பில் மரக்கன்று நடும் விழா நடந்தது. வேலூர் மாவட்டத்தில் நிலவும் வறட்சி இயற்கை வளத்தை கருத்தில் கொண்டு 2003ம் ஆண்டு சக்தி அம்மா காடுகள் வளர்ப்பு திட்டத்தின் கிழ் 5 லட்சம் மரக்கன்றுகள் கைலாசகிரி மலையில் நடப்பட்டது. ஸ்ரீ புரம் தங்கக் கோவில் வளாகத்தில் 30,000 மரங்களும், ஸ்ரீ புரத்துக்கு அருகில் ஒரு லட்சம் மரக்கன்றுகளும் சக்தி அம்மா பசுமை புரட்சி திட்டத்தின் கீழ் நடப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றது. இதன் தொடர்ச்சியாக வேலூர் மாவட்டம் அரக்கோணத்தில் உள்ள மத்திய தொழில் பாதுபாப்பு பயற்சி மையத்தில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டமிடப்பட்டது. இதன் தொடக்க விழா நடந்தது. மத்திய தொழில் பாதுகாப்பு பயிற்சி மைய தலைவர் செல்லதுரை தலைமை வகித்தார். ஸ்ரீ புரம் பொற்கோயில் இயக்குனர் சுரேஷ் பாபு மரக்கன்றுகள் நட்டு திட்டத்தை துவக்கி வைத்தார். ஸ்ரீ புரம் எக்ஸ்னோரா தலைவர் மீனாட்சி சுந்தரம், நாராயணி பீடம் மேலாளர் சம்பத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**சின்ன வெங்காயம் விலை கிடுகிடு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 30,2011,02:24 IST

சேலம்: கோடை மழை மற்றும் வரத்து குறைவால், சேலத்தில் சின்ன வெங்காயம் விலை மீண்டும் கிலோவுக்கு 22 ரூபாய் வரையில் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் சில நாட்களாக கோடை மழை பெய்து வருகிறது. இந்த மழையினால், வெங்காய விளைச்சல் கடுமையாக பாதித்துள்ளது. உடுமலை, மடத்துக்குளம், தளி சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து நாத்து (உயர்ரக வீரியம்) சின்ன வெங்காயமும், ராசிபுரம் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து நாட்டு சின்ன வெங்காயமும் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, நாள் ஒன்றுக்கு 8 முதல் 10 லோடு சின்ன வெங்காயம் சேலத்திற்கு வருகிறது.

சேலத்தில் லீ பஜார், பால் மார்க்கெட், சின்ன கடைவீதி கடைகள், தாதகாப்பட்டி, அம்மாபேட்டை, அஸ்தம்பட்டி, சூரமங்கலம் உழவர் சந்தைகள் மற்றும் வாரச்சந்தை, தினசரி மார்க்கெட்டில் உள்ள கடைகளில் மொத்தமாகவும், சில்லறையாகவும் சின்னவெங்காயம் விற்பனை செய்யப்படுகிறது. கடந்தாண்டு செப்டம்பரில் துவங்கி டிசம்பர் துவக்கம் வரையில் பெய்த தொடர்மழையினால், ஆறு மாதத்திற்கு மேலாக சின்ன வெங்காயமும், பெரியவெங்காயம் விலையும் கடுமையாக உயர்ந்திருந்தது.

பெரிய வெங்காயம் கிலோ, 100 ரூபாய் வரையிலும், சின்ன வெங்காயம் கிலோ, 65 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. ஃபிப்ரவரியில் சின்ன மற்றும் பெரிய வெங்காய உற்பத்தி அதிகரித்ததால், விலை படிப்படியாக குறையத்துவங்கியது. ஏப்ரல் மாத துவக்கத்தில் சின்ன வெங்காயம் கிலோ, 14 ரூபாய் முதல், அதிகபட்சமாக, 18 ரூபாய் வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது. பெரிய வெங்காயம் (சிறியது) கிலோ, 9 ரூபாய்க்கும், (பெரியது) கிலோ, 13 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில், சேலத்தில் மூன்று நாட்களில் சின்ன வெங்காயம் விலை படிப்படியாக அதிகரித்து, கிலோவுக்கு, 22 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. சேலம் பால் மார்க்கெட் சின்ன வெங்காய மொத்த வியாபாரி அருணாச்சலம் கூறியதாவது: நாள் ஒன்றுக்கு, 8 முதல், 10 லோடு வரை சின்ன வெங்காயம் விற்பனைக்கு வருகிறது. உடுமலை நாத்து வெங்காயம் பெரிதாக இருக்கும். நீர்த்தன்மை அதிகமாக உள்ளதால், நீண்ட நாட்கள் வைத்து பயன்படுத்த முடியாது. ராசிபுரம் நாட்டு வெங்காயம் சிறியதாக இருந்தாலும், காய்ந்தும் நீண்ட நாட்கள் வைத்து பயன்படுத்தவும் முடியும். மக்கள் நாட்டு வெங்காயத்தையே அதிகமாக பயன்படுத்துகின்றனர்.

கோடை மழை பெய்ததால், வெங்காய உற்பத்தி பாதித்ததுடன், தற்போது வரத்தும் குறைந்துள்ளது. நாள் ஒன்றுக்கு, 4 லோடு வெங்காயம் மட்டுமே விற்பனைக்கு வருகிறது.

அதனால், கடந்த வாரம் கிலோ, 15 ரூபாய்க்கு விற்ற நாத்து வெங்காயம், 20 ரூபாய் முதல், 32 ரூபாய் வரையிலும், கிலோ, 18 ரூபாய்க்கு விற்ற நாட்டு வெங்காயம், 34 ரூபாய் முதல், 38 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலையேற்றம் தற்காலிகமானது தான். வரத்து அதிகரித்தால் மட்டுமே விலை குறைய வாய்ப்புள்ளது. இல்லையெனில் மேலும், கிலோவுக்கு ஐந்து ரூபாய் முதல் பத்து ரூபாய் வரையில் அதிகரிக்ககூடும். இவ்வாறு அவர் கூறினார்.

**கொட்டை முந்திரி விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 30,2011,23:29 IST

வருஷநாடு : கொட்டை முந்திரி விலை குறைந்து வருவதால் வருஷநாடு பகுதி விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.
கண்டமனூர், கடமலைக்குண்டு, ராஜேந்திரநகர், பாலூத்து, மயிலாடும்பாறை, வருஷநாடு, முருக்கோடை, சிங்கராஜபுரம், வாலிப்பாறை, வாயக்கால்பாறை, கோவில்பாறை, முத்தலாம்பாறை, சிறப்பாறை ஆகிய பகுதிகளில் பத்தாயிரம் ஏக்கர் பரப்பளவில் கொட்டை முந்திரி சாகுபடி நடந்து வருகிறது. ஒரு கிலோ 85 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. கடந்த சில தினங்களாக விலை குறைந்து 55 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. பத்து நாட்களில் 30 ரூபாய் விலை குறைந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**நெல் விலை உயராததால் விவசாயிகள் அதிருப்தி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 30,2011,00:13 IST

சிவகாசி : கைகொடுத்த பருவமழையால் நெல் சாகுபடி பரப்பு அதிகரித்தது. நெல் கொள்முதல் விலை உயராததால் விவசாயிகள் மூடைகளை இருப்பு வைத்துள்ளனர்.
சிவகாசி, புதுக்கோட்டை, எரிச்சநத்தம், செவலூர், திருத்தங்கல் பகுதிகளில் கடந்த ஐந்து ஆண்டுகளை விட அதிக மழையால் இந்தாண்டு அதிகளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குவிண்டால் 650 முதல் 700 ரூபாய் வரை ஆரம்பத்தில் விலைபோனது. திருத்தங்கலில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டது. அரசு 770க்கு கொள்முதல் செய்கிறது. இந்த விலை கட்டுபடியாகவில்லை என விவசாயிகள் கூறினர். வெளி மார்க்கெட்டில் தற்போது குவிண்டால் 800 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இன்னும் நெல் விலை உயரும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் அதிகளவு மூடைகளை இருப்பு வைத்துள்ளனர்.

கடலில் மீன் பிடிக்க 45 நாள் தடை: ஈரோட்டில் மீன் விற்பனை மந்தம்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 30,2011,02:21 IST

ஈரோடு: கடலில் மீன் பிடிக்க 45 நாள் தடை விதிக்கப்பட்டதால், மீன்வரத்து குறைவாகவே உள்ளது. மேலும், விற்பனையும் மந்தமாகவே உள்ளது. தமிழக அரசு கடலில் மீன் பிடிக்க 45 நாள் தடை விதித்தது. இதனால், மீனவர்கள் யாரும் மீன்பிடிக்க செல்வதில்லை. சென்னை, கடலூர், கன்னியாகுமரி ஆகிய பகுதியில் இருந்து ஈரோட்டுக்கு மீன் வரத்து மிகவும் குறைவானது.

இந்நிலையில், கேரள, ஆந்திர மாநிலம் கடற்பகுதியில் இருந்து மீன் வியாபாரிகள் கடல் மீன்களை லாரியில் ஈரோட்டுக்கு கொண்டு வருகின்றனர். மீன்களின் விலையும் சற்று கூடுதலாகவே உள்ளது. கடல் மீன்களான வஜ்ஜிரம், மத்தி, அயிரை, இறால், ஊழி வெலத்தி, சங்கரா மற்றும் நண்டு ஆகியவை மட்டுமே ஈரோட்டுக்கு கொண்டு வருகின்றனர். அணை மற்றும் ஆற்று மீன்களான ரோகு, கட்லா மட்டுமே அதிகளவு வருகிறது. ஈரோடு மார்க்கெட்டில் சென்ற வாரத்தை விட நேற்று கடல் மீன்கள் கிலோவுக்கு 30 முதல் 150 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. இதனால், அசைவ பிரியர்களும் கடல் மீன் விலையேற்றத்தால், ஆற்று மீன்களையே வாங்கி செல்கின்றனர். மீன் விற்பனையும் சென்ற வாரத்தை விட மந்தமாகவே காணப்படுகிறது. ஈரோடு சூரம்பட்டி மீன் மார்க்கெட் வியாபாரி காதர் கூறியதாவது: ஈரோட்டில் சூரம்பட்டி, கருங்கல்பாளையம் ஆகிய இரண்டு பெரிய மீன் மார்க்கெட் உள்ளது.

மாநகர் முழுவதும் 300க்கும் மேற்பட்ட மீன் கடைகளில் 1,000க்கும் மேற்பட்ட மீன் வியாபாரிகள் உள்ளனர். கடலில் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதால், மீனவர்கள் மீன் பிடிக்க செல்வதில்லை. தற்போது, கேரளா, ஆந்திர மாநிலங்களில் இருந்து கடல் மீன்கள் ஈரோட்டுக்கு கொண்டு வரப்படுகின்றன. மேட்டூர், காவிரி, கொடுமுடி ஆகிய பகுதியில் இருந்து ஆற்று மீன்கள் அதிகளவு கொண்டு வருகின்றனர். விடுமுறை நாளில் அசைவ பிரியர்கள் கடல் மீன்களைதான் அதிகளவு வாங்கி செல்வர். தற்போது, கடல் மீன்கள் வரத்து மிகவும் குறைந்துவிட்டது.

கடல் மீன்களான வஜ்ஜிரம் கிலோ 350லிருந்து 500 ரூபாய்க்கும், இரால் 250 ரூபாய், அயிரை கிலோ 100 ரூபாய், வெலத்தி கிலோ 150 ரூபாய்கும், கண்ணாடி பாறை கிலோ 170 ரூபாய், மத்தி கிலோ 40 ரூபாய், சங்கரா கிலோ 140 ரூபாய், ஜிலேபி 50 ரூபாய் என விற்பனை செய்யப்பட்டது. ஆற்று மீன்களான ரோகு மற்றும் கட்லா கிலோ 80 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிலோ நண்டு 140 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கிலோவுக்கு 30லிருந்து 150 ரூபாய் வரை மீன்களின் விலை உயர்ந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**வேளாண் பல்கலை மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பம் :பட்டுப்புழுவியல் பாடப்பிரிவு துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 29,2011,23:09 IST

கோவை : கோவை, வேளாண் பல்கலை மற்றும் பல்கலைக்கு உட்பட்ட கல்லூரிகளில், இளங்கலை பட்டப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு, மே 6ம் தேதி முதல் விண்ணப்பங்கள் வினியோகிக்கப்படுகின்றன.
பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி கூறியதாவது: இளங்கலை அறிவியல் பட்டப்படிப்பில் வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல், மனையியல், வேளாண்மைப் பொறியியல், பட்டுப்புழுவியல் துறைகளுக்கு சேர்க்கை நடக்க உள்ளது. தொழில்நுட்ப பட்டப்படிப்பில் (பி.டெக்.,) உணவு பதன் பொறியியல், உயிர் தொழில் நுட்பவியல், தோட்டக்கலை, ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல், வேளாண் தொழில் மேலாண்மை, வேளாண்மை தகவல் தொழில் நுட்ப துறைகளுக்கும் சேர்க்கை நடக்கிறது.

பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள் மற்றும் ஏற்புக் கல்லூரிகளில், இப்பாடப் பிரிவுகள் வழங்கப்படுகின்றன. இளங்கலை அறிவியல் பட்டப்படிப்பில், உறுப்புக் கல்லூரிகளில் 685, ஏற்புக் கல்லூரிகளில் 390 என, 1,075 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவர். பி.டெக்., பிரிவில் 290 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். பட்டுத்தொழிலின் அபரிமிதமான வளர்ச்சியைக் கருதி, நடப்பாண்டு முதல், பட்டுப்புழுவியல் துறையில் இளங்கலை பாடப்பிரிவு துவங்கப்பட்டுள்ளது. இளங்கலை பிரிவுக்கு விண்ணப்பிக்க, பிளஸ் 2வில் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல், அல்லது உயிர் வேதியியல், உயிர்த்தொழில் நுட்பம், நுண்ணுயிரியல், மனையியல், கணினி அறிவியல் பாடங்களில் ஏதேனும் ஒன்று பயின்றிருக்க வேண்டும். தாவரவியல், விலங்கியல் பயின்ற மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். மே 6ம் தேதி முதல், விண்ணப்பங்கள் வினியோகிக்கப்படுகின்றன; மே 31ம் தேதி இறுதி நாள். விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, ஜூன் 10ம் தேதி தரவரிசை வெளியிடப்படும்; ஜூன் 15ம் தேதி முதல் 19ம் தேதி வரை, கவுன்சிலிங் நடக்கிறது.

உடல் ஊனமுற்றோர், முன்னாள் ராணுவ வீரர், விளையாட்டு உட்பட சிறப்பு இட ஒதுக்கீடுகளுக்கான கவுன்சிலிங், ஜூன் 25ம் தேதி நடக்கும்; ஜூலை 18ம் தேதி வகுப்புகள் துவங்கும். விண்ணப்பக் கட்டணம் 600 ரூபாய்; எஸ்.சி., எஸ்.டி., பிரிவினருக்கு 300 ரூபாய். ஒரே விண்ணப்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட பாடப்பிரிவுகளுக்கு விண்ணப்பிக்கலாம். மிகக்குறைந்த கல்விக் கட்டணம், குடிமைப் பணிக்கான தேர்வுகள், வெளிநாட்டில் கல்வி பயில்வதற்கான தகுதி தேர்வு, வெளிநாட்டு மொழி கற்க பிரத்யேக மொழி ஆய்வுக் கூடங்கள் என, அரிய வாய்ப்புகளை

மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு, துணைவேந்தர் முருகேச பூபதி கூறினார்.

**கோகோ சாகுபடிக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 29,2011,21:48 IST

கிணத்துக்கடவு : கிணத்துக்கடவு பகுதி தென்னந்தோப்புகளில் "கோகோ' சாகுபடி செய்தால், தென்னை விளைச்சல் அதிகரிக்கும் என தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் முகமது இக்பால் கூறினார். கோவை மாவட்டத்தில் "கோகோ' பயிரிடுவதற்கான தட்பவெப்ப நிலை, மண் வளம் மற்றும் நீர்வளம் ஏற்றதாக உள்ளது. தென்னையில் "கோகோ' ஊடுபயிராக பயிரிடுவதன் மூலம், தென்னை விளைச்சல் அதிகரிக்கிறது. ஆண்டுக்கு 800 கிலோ இலைகள் உதிர்வதால், மண்ணில் அங்கக சத்து உயர்கிறது. சிறந்த முறையில் களை கட்டுப்பாடு செய்யப்படுகிறது. மண் அரிமானம் தடுக்கப்படுகிறது. மண்ணின் ஈரப்பதம் காக்கப்படுகிறது.ஒரு ஏக்கரில் "கோகோ' பயிரிடுவதற்கு 200 முதல் 220 நாற்றுகள் தேவைப்படும். நல்ல முறையில் பராமரிப்பு செய்தால், ஆண்டுக்கு மரம் ஒன்றில் இருந்து இரண்டு கிலோ உலர் விதைகள் கிடைக்கும். ஆண்டு விளைச்சல் 400 கிலோ உயரும். ஆண்டு வருமானம் 28 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும். இதில் செலவு போக நிகர லாபம் 20 ஆயிரம் ரூபாய் விவசாயிகளுக்கு கிடைக்கும் என தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் முகமது இக்பால் தெரிவித்துள்ளார்.

**வெல்லம் உற்பத்தி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 29,2011,21:41 IST

பொள்ளாச்சி : தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்த மழையினால், வெல்ல உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், பொள்ளாச்சி சந்தைக்கு வெல்ல வரத்து குறைந்து, விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பொள்ளாச்சி சந்தைக்கு, மதுரை, நெய்காரபட்டி, காரத்தொழுவு, சாமரபட்டி, பெருமாள்புதூர் உட்பட சுற்றுப்பகுதிகளிலிருந்து வெல்லம் வருகிறது. இங்கு வரும் வெல்லத்தில் 40 சதவீதம் வட மாநிலங்களுக்கும், 30 சதவீதம் கேரள மாநிலத்திற்கும், 30 சதவீதம் தமிழகத்தின் பிறப்பகுதிகளுக்கும் விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. தற்போது, பொள்ளாச்சியில் கேரள மாநில வெல்ல சீசன் நிறைவடைந்து, தமிழகப்பகுதியில் துவங்கியுள்ளது. கடந்த மாதத்தை விட இம்மாதம் கேரளப்பகுதிகளிலிருந்து வெல்லம் வரத்து குறைந்துள்ளது.

கோடை சீசனில் பல்வேறு பகுதிகளிலும் மழை பெய்ததால், உற்பத்தி பாதிக்கப்பட்டுள் ளது. இதனால், இந்த வாரம் சந்தைக்கு வெல்ல வரத்து குறைந்துள்ளது. இந்தவாரம் ஏலத்திற்கு, 30 கிலோ எடையுள்ள 400 மூட்டை சிப்பமும், 57 கிலோ எடை கொண்ட ஆயிரம் மூட்டை வெல்லமும் வரத்தாக இருந்தது. வெல்லத்தை ஏலம் எடுக்க வெளி மாநில விவசாயிகள் வந்தனர். இதில், 500 மூட்டை குஜராத் உள்ளிட்ட வட மாநிலங்களுக்கும், 300 மூட்டை கேரள மாநிலத்திற்கும், 200 மூட்டை தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகிறது. வெல்லம் வரத்து குறைந்து வருவதால், விலையிலும் மாற்றம் ஏற்பட்டது. நயம் ரக வெல்லம் ஒரு மூட்டை ஆயிரத்து 610 ரூபாய்க்கும், செங்கால் - 1,350, பச்சவெட்டு - 1,500, கருப்பு - 1,200 என்ற விலையில் வியாபாரிகள் ஏலம் எடுத்தனர்.

பொள்ளாச்சி பகுதி வெல்ல வியாபாரிகள் சங்க செயலாளர் சாகுல்அமீது கூறியதாவது: வரும் வாரங்களில் உற்பத்தி மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. 15 நாட்களுக்கு பின் சந்தைக்கு மீண்டும் வெல்ல உற்பத்தி அதிகரிக்கும். அப்போது, விலையில் சரிவு ஏற்படும் வாய்ப்புள்ளது. வெல்லத்திற்கு கிராக்கி ஏற்பட்டால், வரத்தை பொறுத்து விலை உயரலாம். இந்தாண்டு 85 சதவீதம் கரும்பு விளைச்சல் உள்ளது. உற்பத்தி செய்ய ஆட்களும் இருப்பதால், சீசன் முடியும் வரை வரத்து சீராக இருக்கும், என்றார்.

**வெங்காயம், வெள்ளைப்பூண்டு சாகுபடி பெருக்க புதிய தொழில் நுட்பங்கள் உருவாக்கவேண்டும்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 29,2011,23:09 IST

ஊட்டி :"வெங்காயம், பூண்டு சாகுபடியை பெருக்க உயர் விளைச்சல் தரக்கூடிய தொழில் நுட்பங்களை உருவாக்க வேண்டும்,' என அகில இந்திய ஆராய்ச்சி நிறுவன துணை இயக்குனர் தெரிவித்தார். இந்தியாவில் வெங்காயம் மற்றும் பூண்டுக்கான அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டம், புனேவை தலைமையிடமாகக் கொண்டு 12 ஒருங்கிணைந்த மையம் மற்றும் 16 தன்னார்வ மையங்கள் மூலம் இயங்கி வருகிறது. இத்திட்டத்தின் நோக்கம் பல்வேறு வகையான வெங்காயம் மற்றும் பூண்டு வகைகளை சேகரிப்பது;உயர் விளைச்சல் ரகங்களை கண்டுபிடிப்பது; பயிர் உற்பத்தி மற்றும் பயிர் பாதுகாப்பு நுட்பங்களை உருவாக்குவதாகும். இந்த ஆராய்ச்சி திட்டத்தின் முடிவுகள் பற்றிய கலந்தாய்வு ஆண்டுக்கு ஒரு முறை நடந்து வருகிறது. இத்திட்டத்தின் 2வது ஆண்டுகுழு கலந்தாய்வு கூட்டம் ஊட்டியில் நேற்று துவங்கியது.

டில்லி அகில இந்திய ஆராய்ச்சி நிறுவன (தோட்டக்கலை) துணை இயக்குனர் சிங் துவக்கி வைத்து பேசியதாவது;

தமிழ்நாட்டில் சிறிய வெங்காயம் முக்கிய பணப்பயிராக உள்ளது. சுமார் 31 ஆயிரத்து 503 எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 2 லட்சத்து 52 ஆயிரத்து 500 டன் உற்பத்தி செய்யப்படுகிறது. வங்க தேசம், மலேசியா மற்றும் துபாய் போன்ற நாடுகளுக்கு சிறிய வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. பூண்டு தமிழ்நாட்டில் ஊட்டி மற்றும் கொடைக்கானல் மலைப்பகுதிகளில் பயிரிடப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் பூண்டு மற்றும் வெங்காயம் ஆராய்ச்சியில் ஒரு முக்கிய மையமாக உள்ளது. வெங்காயம் பற்றிய ஆராய்ச்சி கோவை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலும், பூண்டு பற்றி ஆராய்ச்சி ஊட்டி தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்திலும் நடந்து வருகிறது. வெங்காயம் மற்றும் பூண்டு சாகுபடியை பெருக்க உயர் விளைச்சல் தரக்கூடிய தொழில் நுட்பங்களை உருவாக்குவது முக்கியம்.இவ்வாறு சிங் பேசினார்.

ஊட்டி மோனார்க் ஓட்டலில் நடந்த கூட்டத்துக்கு கோவை வேளாண் பல்கலைக்கழக பதிவாளர் சுப்பையன் தலைமை வகித்து, வெங்காயம் மற்றும் பூண்டு ரகங்கள் மற்றும் உற்பத்தி தொழில் நுட்பங்கள் குறித்து பேசினார்.வெங்காயம் மற்றும் பூண்டு ஆராய்ச்சி இயக்க இயக்குனர் லாவண்டே திட்டம் குறித்து விளக்கினார். இந்த கலந்தாய்வு கூட்டம் இரண்டு நாட்கள் 5 பகுதிகளாக நடக்கிறது. வெங்காயம் பற்றி பொதுவான தகவல்கள், பயிர் பாதுகாப்பு, சீர்மிகு சாகுபடி தொழில் நுட்பங்கள், புதிய ரகங்களை உருவாக்குவது போன்றவை கலந்துரையாடலில் இடம் பெறுகின்றன.

**கொள்முதல் இல்லாததால் விவசாயிகள் பாதிப்பு : விலை கிடைக்காததால் புகையிலை தேக்கம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 29,2011,21:03 IST

குஜிலியம்பாறை : புகையிலை விவசாயிகளுக்கு, போதிய விலை கிடைக்காத நிலையில்,வெளி மாநில வியாபாரிகளும் வராததால், புகையிலையை விற்க முடியாமல், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.
வேடசந்தூர், லட்சுமணன்பட்டி,கேதையுறும்பு, சுள்ளெரும்பு உள்ளிட்ட பகுதிகளில், புகையிலை விவசாயத்திற்கு தகுந்த மண்,நீர் வளம் இருப்பதால், ஏராளமான விவசாயிகள் புகையிலை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் உற்பத்தி செய்யும் புகையிலையை, டில்லி, மும்பை உள்ளிட்ட வெளி மாநில வியாபாரிகள் வந்து, கொள்முதல் செய்து செல்வர். இப்பகுதியில், புகையிலைக்கு ஏற்ற மண் வளம் உள்ளதால் தான், தமிழக அளவில், வேடசந்தூரில், மத்திய புகையிலை ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு புகையிலை, விவசாயத்தில் ஈடுபட்ட விவசாயிகள், மகசூல் எடுத்துள்ள நிலையில், கொள்முதல் செய்வதற்கான வெளி மாநில வியாபாரிகள் இதுவரை வரவில்லை. தமிழக வியாபாரிகள் மட்டுமே வருவதுடன், கடந்த ஆண்டு, கிலோ ரூ.45-50 க்கு விற்ற புகையிலையை, இந்த ஆண்டு அதிகபட்சமாக கிலோ ரூ.25-30வரை கேட்கின்றனர். போதிய லாபம் இல்லாத நிலையில், அரசு கொள்முதல் நிலையம் எதுவும் இல்லாததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஒவ்வொரு நாளும் அதை, புரட்டிப்போட்டு, பக்குவப்படுத்த வேண்டி உள்ளதால், சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.
இது குறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ராஜரத்தினத்திடம் கேட்டபோது; வெளி மாநில வியாபாரிகள் வராததால், புகையிலையை விற்க முடியவில் லை. அரசே, நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் கொள்முதல் செய்து, விவசாயிகளை பாதுகாத்திட வேண்டும் என்றார்.

**நெல் கொள்முதல் துவங்கியது**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 29,2011,21:08 IST

குஜிலியம்பாறை : நெல் கொள்முதல் நிலையங்களில், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கொள்முதல் பணி மீண்டும் துவங்கியது.
திண்டுக்கல் மாவட்டத்தில், நிலக்கோட்டை-விளாம்பட்டி, ஆத்தூர், பழநி உள்ளிட்ட ஏழு இடங்களில், நெல் கொள்முதல் நிலையங்கள் உள்ளன. நெல் அறுவடை சீசன் துவங்கிய நிலையில், தேர்தல் விதிமுறை காரணத்தை கூறி, நெல் கொள்முதல் செய்வது நிறுத்தப்பட்ட இருந்தது. தேர்தல் முடிந்த நிலையில், நெல் கொள்முதல் செய்யக்கோரி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் மறியல் அறிவிப்பு செய்திருந்தனர். இந்நிலையில், விவசாயிகள் சங்கத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்திய மாவட்ட நிர்வாகம், நெல் கொள்முதல் செய்ய உத்தரவிட்டது. இதையடுத்து, ஒவ்வொரு நிலையங்களிலும், கிலோ ரூ.10.50 வீதம், தினமும் ரூ.7 லட்சம் அளவிற்கு, நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.

## இந்தியாவில் மரபணு கத்தரிக்காயை அனுமதிக்கக்கூடாது மத்திய அரசுக்கு டாக்டர் ராமதாஸ் கோரிக்கை

சென்னை, ஏப்.30–

உலகமே இயற்கை வேளாண்மைக்கு மாறிவரும் நிலையில், இந்தியாவில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய் அறிமுகப்படுத்துவதை மத்திய அரசு தடுத்து நிறுத்தவேண்டும்'' என்று, டாக்டர் ராமதாஸ் கூறினார்.

இது தொடர்பாக, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

அன்றும்–இன்றும்

மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காயை விளைவிக்கவும், விற்பனை செய்யவும் அனுமதி அளிக்கப்படாது என்று மத்திய அரசு கடந்த ஆண்டு திட்டவட்டமாக அறிவித்திருந்தது. இந்த நிலையில், இந்த வகை கத்தரிக்காயை கொல்லைப்புற வழியாக அறிமுகப்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகள் சுற்றுச் சூழல் மீதும், பொதுமக்கள் நலன் மீதும் அக்கறை கொண்டவர்களை கவலை அடையச் செய்துள்ளது.

இதுதொடர்பாக முழுமையான ஆராய்ச்சி நடத்தப்பட்டு, பொதுமக்களுக்கோ அல்லது வேளாண் நிலங்களுக்கோ எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்பது உறுதி செய்யப்பட்ட பிறகுதான் மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய்க்கு அனுமதி அளிக்கப்படும் என்று மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் கூறியிருந்தார்.

ஏற்றுக்கொள்ள முடியாது

அதன்பின் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக இதுதொடர்பாக எந்த ஆய்வும் நடத்தப்படாத நிலையில், ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகளே போதுமானது என்று கூறி மரபணு கத்தரிக்காய்க்கு அனுமதி அளிக்க மத்திய அரசின் வல்லுநர் குழு முடிவு செய்திருப்பதாக வந்துள்ள செய்தி அதிர்ச்சி அளிக்கிறது.

இயற்கைக்கும் மரபுக்கும் எதிரான இந்தக் கத்தரிக்காயை எக்காரணத்தை முன்னிட்டும் அனுமதிக்கக்கூடாது. வேளாண் விளைச்சலை அதிகரிக்கவும், கத்தரிக்காயை

பூச்சிக்கொல்லி தாக்குவதை தடுக்கவும்தான் மரபணு மாற்ற கத்தரிக்காயை அறிமுகப்படுத்துவதாக கூறப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. விளைச்சலை அதிகரிப்பதற்காக பொதுமக்களின் உடல் நலனுக்கு தீங்கு ஏற்பட அனுமதிப்பதென்பது கொள்ளிக்கட்டையை எடுத்து தலையை சொரிந்து கொள்வதற்கு சமமானதாகவே அமையும்.

தடுத்து நிறுத்தவேண்டும்

வேளாண் விளைச்சலை பெருக்க எத்தனையோ வழிமுறைகள் உள்ளன. வேளாண் நிலங்கள் வீட்டு மனைகளாக மாற்றப்படுவதை தடுக்கலாம் – மண் பரிசோதனை செய்து அதற்கேற்ற உரங்களை பரிந்துரைக்கலாம். இவற்றையெல்லாம் விட்டுவிட்டு வேளாண் விளைச்சலை அதிகரிக்கும் முயற்சி என்ற பெயரில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய்க்கு அனுமதி வழங்குவதென்பது, இந்திய விவசாயிகளின் நலனை புறக்கணித்துவிட்டு பன்னாட்டு நிறுவனங்களுக்கு வெண்சாமரம் வீசும் செயலாகவே இருக்கும்.

உலகமே இயற்கை வேளாண்மைக்கு மாறிவரும் நிலையில், இந்தியாவில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய் அறிமுகப்படுத்தப்படுவதை மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும்.இவ்வாறு டாக்டர் ராமதாஸ் கூறி உள்ளார்.